கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாசார பீடம்

புவியியல் துறை

இரண்டாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு (வெளிவாரி) மீள்பரீட்சை

ஆகஸ்ட் - 2017

LIBRARY 21 EASTERN UNIVERSITY

| | |
|---|---|
| **GEO: 201 - சூழல் புவியியல்**<br>**Environmental Geography** | நேரம்: 3 மணித்தியாலங்கள் |

ஏவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக

கையெழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

1. "சூழல்" என்பதனை வரையறை செய்வதுடன் சூழலில் காணப்படும் உயிரின (biotic), உயிரற்ற (abiotic), கூறுகளை எடுத்துக் காட்டி அவற்றுக்கிடையிலான இடைத் தொடர்புகளை புனையா வரிப்படங்களின் துணையுடன் விளக்குக.

   (25 புள்ளிகள்)

2. "புவிநடுக்க அலைகளினால் (seismic waves) உருவாகும் அனர்த்தங்கள் புவிமேற்பரப்பில் உயிரிழப்புக்களை ஏற்படுத்துவதுடன், பல சூழலியல் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கின்றன" விளக்குக.

   (25 புள்ளிகள்)

3. (அ). வளிமண்டலத்தில் அண்மைக் காலங்களில் பச்சைவீட்டு வாயுக்களின் செறிவு அதிகரித்து வருவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு, அவ்வாயுக்களின் அண்மைக்கால போக்கு பற்றி விளக்குக.

   (13 புள்ளிகள்)

   (ஆ). பச்சைவீட்டு வாயுக்கள் வளிமண்டலத்தில் செறிவடைவதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி ஆராய்க.

   (12 புள்ளிகள்)

4. (அ). இயற்கை அனர்த்தங்களை வகைப்படுத்துக.

(05 புள்ளிகள்

(ஆ). "சூறாவளியுடன் கூடிய வெள்ள அனர்த்தம் ஏற்படும் போது உயிரிழப்பு பொருளாதார மற்றும் சூழலியல் பாதிப்புக்களும் பாரியளவி ஏற்படுகின்றன" இந்திய, இலங்கை அனுபவங்களினடிப்படையி இக்கூற்றினை ஆராய்க.

(20 புள்ளிகள்

5. "உலகில் அதிகரித்துவரும் குடித்தொகை துரித வளப்பாவனைக்கு இட்டு சென்றுள்ளதுடன் அது பல்வேறு சூழலியல் பிரச்சினைகளையு தோற்றுவித்துள்ளது" வளர்முக நாடுகளை முன்னுதாரணமாகக் கொண் இக்கூற்றினை ஆராய்க.

(25 புள்ளிகள்

6. பின்வருவனவற்றுள் ஏவையேனும் இரண்டினுக்கு விளக்கக் குறிப்புரை தருக.

அ. வளிமண்டல அமைப்பு

ஆ. நீரியல் வட்டம்

இ. ஓசோன்படையின் சிதைவும் அதனால் ஏற்படும் விளைவுகளும்

(12.5x2=25 புள்ளிகள்

.........................